18th March 1965]

கனம் திரு. வெ. ராமையா : அந்த ஆராய்ச்சிக்குப் போகவேண்டாம் இப்பொழுது. சில சந்தர்ப்பங்களிலே விலைவாசி அதிகம் ஆகிவிடுகிறது. அந்த விலைவாசி ஏற்றத்தைத் தடைசெய்ய, கூட்டுறவு அடிப்படையில், மொத்தமாக வாங்கி, லாபக் கண்ணோட்டம் இல்லாமல், விற்பனை செய்தால் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் அளவில் இருக்கும் என்ற நோக்கத்தோடு, கடைகளைத் துவங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அவ்வளவுதான்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சார், நியாய விலைக்கடைகளை அரசாங்கமே ஏற்று நடத்துகிறதா அல்லது தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்களா என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கம் நடத்தவில்லை. கூட்டுறவு சொஸைடிகளைத் தொடங்கி, அவர்கள் நடத்த முன்வந்தால் சிறு உதவிகள், இடம் தேடிக் கொடுப்பது, மற்ற வசதிகள் செய்து கொடுப்பது போன்ற உதவிகளை ஸ்தல அதிகாரிகள் செய்து கொடுக்கிறார்கள். அவ்வளவுதான்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, காய்கறிகளைப் பயிரிடும் விவசாயிகளுக்கு முன் பணம் கொடுத்தால், காய்கறிகளை அரசாங்கத்திடமே கொடுக்கவேண்டும், ஏலத்தில் விடும்போது லாபம் கிடைக்கும், குறைந்த விலைக்கு விற்பனை செய்யலாம். ஆகவே அப்படிச் செய்ய முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : காய்கறிகளை அதிகமாக உற்பத்தி செய்ய விவசாய இலாகாவில் கடன் உதவி, மற்ற உதவிகள் எல்லாம் செய்கிறார்கள். அவற்றை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

ஜமாபந்தி முறையை மாற்றியமைத்தல்

*** 269 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) " ஜமாபந்தி " முறைக்குப்பதிலாக கணக்குத் தணிக்கை முறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் ஏதேனும் கோரிக்கை தெரிவித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) விஷயம் அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

திரு. எம். தண்டாயுதபாணி : சார் இந்த ஜமாபந்தி முறை கிராம மக்களுடைய குறைகளைக் கவனிக்க என்று ஏற்படுத்தப்பட்டது. கிஸ்தி வசூல் செய்த மூன்று மாதம் கழித்து ஜமாபந்தி நடப்பதனால், அதன் பிறகு விவசாயிகளிடம் இரு முறை வசூல் செய்யும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, கிராம கர்ணிகர்களுடைய கணக்குகளைப் பரிசீலனை செய்ய, வசூலுக்கு முன்பாக வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்பதை யோசிக்க முன்வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : ஜமாபந்தி முறை ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் உள்ள நிலைமைகளை ஒரு விசேஷ அதிகாரி கவனித்துத்தீர்க்க வேண்டும் என்று ஏற்பட்டது. அதில் முக்கியமான அம்சம், கிராமக் கணக்குகளைப் பரிசீலிக்க வேண்டும் என்பது. ஏதாவது தவறுகள் ஏற்பட்டிருந்தால் அதை அந்த விசேஷ அதிகாரி கவனிப்பார்கள். அதனால் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும். ஏதோ கணக்கைப் பரிசீலனை செய்வதால் இருமுறை வசூலிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பது சரியாகாது. அப்படிப் பட்ட நிர்ப்பந்தம் எதுவும் ஏற்படாது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த ஜமாபந்தி நடக்கும்போது, கலெக்டர், ஆர்.டி.ஒ. இவர்கள் ஒரு இடத்தில் 10, 15 நாட்கள் முகாம் செய்து எல்லா வில்லேஜ் கணக்குகளையும் பார்க்க வேண்டும் என்று இருக்கிறது. அவர்களுக்கு அவகாசம் போதாததால், அதற்கு என்று ஒரு தனிப்பட்ட ஆடிட்டர் குழுவை வைத்துப் பரிசீலனை செய்ய அரசாங்கத்திடம் ஏதாவது யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம். திரு. வெ. ராமைய்யா : இந்த சிபாரிசைத்தான் கிராம அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். ஜமாபந்தி என்பது கணக்கைப் பார்ப்பது மட்டுமல்ல. அந்தச் சந்தர்ப்பத்தில், விவசாயிகளுடைய குறைகள், கோரிக்கைகள் கவனிக்கப்படுகின்றன. ஆகவே, கணக்குத் தணிக்கைக்கும், ஜமாபந்திக்கும் அடிப்படை முறையில் வித்தியாசம் இருக்கிறது. கணக்கு மட்டும் பரிசீலனை செய்வது என்றால் அது வேறு சமாசாரம். கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதில், விவசாயிகளுடைய குறைகள், கோரிக்கைகள் முதலியவையும் கவனிக்கப்படுகின்றன ஜமாபந்தி சமயத்தில்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஜமாபந்தி முறையானது விவசாயிகளுடைய குறைகளைக் கேட்க என்று அந்த நாட்களில் வைக்கப்பட்டது. ஆனால் இன்று எடுத்துப் போகும் மகஜர்களைக் கூட அதிகாரிகள் சரிவரக் கவனிப்பது இல்லை. இரண்டு, மூன்று வருஷங்கள் ஆனாலும், மறுபடியும் அதே குறையைச் சொல்ல வேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆகவே இருக்கும் முறையை சற்று மாற்றி விவசாயிகளின் குறைபாடுகள், கோரிக்கைகளைக் கவனிக்கும் நிலையை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்தின் பல்வேறு முயற்சிகளின் காரணமாக, விவசாயிகளுடைய குறைகள் ஜமாபந்தி வரைக்கும் காத்திருக்க வேண்டும் என்பதில்லை. பொதுவாக அதிகாரிகள் விவசாயிகளுடைய கிராமங்களுக்குப் போகும்போதும், மற்றபடி அமைச்சர்கள் போகும்போதும் விவசாயிகள் தங்களுடைய குறைகளை எடுத்துக் கூற சந்தர்ப்பம் இருக்கிறது. ஜமாபந்தி முறையைப் பொறுத்தவரை, ஏராளமாக அந்த ஸ்தலத்தில் இருக்கும் பிரச்சினைகளைக் கவனிக்க, அவற்றைத் தீர்க்க விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. கனம் அங்கத்தினர் சொல்வது போல ஒரு சில ஜமாபந்தி அதிகாரிகள் கவனிக்காமல் இருந்தாலும், பெரும் பகுதி மாநிலம் பூராவிலும் விவசாயிகளுக்கு நன்மைதான் கிடைக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஜமாபந்தி ஒரு வரவேற்கத்தக்க முறை. விவசாயிகள் குறைகளை எடுத்துச் சொல்ல முற்படுகிறார்கள். அதிகாரிகள் தீர்ப்புகள் வழங்குகிறார்கள். ஆனால் அந்தத் தீர்ப்புகள் அந்த ஆண்டிலேயே நிறைவேற்றப் படுகிறதா என்று அறிய வாய்ப்பில்லை. ஆகவே, மறு ஆண்டும் அதையே திருப்பி எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஜமாபந்தியில் கொடுக்கும் தீர்ப்புகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று கண்டு அறிய இருக்கும் அமைப்பு என்ன ? அப்படிப்பட்ட அமைப்பு இல்லை என்றால் அமைப்பை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் கொடுக்கும் தீர்ப்புகள் அமுலாக்கப்படுகின்றனவா என்று ரெவின்யூ இலாகாவில் தொடர்ந்து கவனிக்க தாலூகா, ஜில்லா மட்டத்திலே "ரெவ்யூ" செய்கிறார்கள். சில சந்தர்ப்பங்களிலே, அவை விரைவில் முடிந்து விடுகின்றன. சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகின்றது. இருந்தாலும் விவசாயிகளுடைய குறைகளைச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்பதுதான் இந்த ஜமாபந்தியின் முக்கிய அம்சம்.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, இந்த ஜமாபந்தி ஏப்ரல் கடைசி, மே மாத ஆரம்பத்தில் நடைபெறுகிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அதிக வசூலாகின்றன. ஆரம்

18th March 1965]

பத்தில் ஒரு தொகையை நிர்ணயித்து வசூல் செய்கிறார்கள். வசூல் செய்த பிறகு ஜமாபந்தி நடப்பதால், குறைவை மறுபடியும் வசூல் செய்ய வேண்டும் என்கிற அவசியம் ஏற்படுகிறது. ஆகவே இந்தக் கணக்குகளை பிப்ரவரி ஆரம்பத்திலேயே பரிசீலிக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அது ஒன்றும் இப்பொழுது பரிசீலனையில் இல்லை. கனம் அங்கத்தினர் சொல்வது ஒரு பொதுப் பிரச்சினை அல்ல. கனம் அங்கத்தினர் பகுதியில் ஏதாவது அப்படி தனிப்பட்ட முறையில் கஷ்டங்கள் இருந்து, அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், பரிசீலனை செய்யப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : ஸார், ஜமாபந்தி சமயத்தில் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் கொடுத்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்கக் காலதாமதம் ஆகிறது என்பதால், குறிப்பிட்ட காலத்திற்குள் அதை வழங்க வேண்டும் என்று ஒரு காலவரை ஏற்படுத்தி விண்ணப்பங்களைப் பெற்று மாற்றிக்கொடுக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். அதோடு, அந்தப் பொறுப்பை, தாசில்தார் அந்தஸ்து உள்ளவர்களிடம் கொடுத்து குறித்த காலத்திற்குள் அப்படிப்பட்ட குறைகளையும், ஆவலாதிகளையும் குறைக்க சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இந்தப் பட்டா மாறுதல் செய்வதில் கஷ்டம் இருக்கிறது. வெறுமனே ரெவின்யூ இலாகா மட்டும் செய்து விடுவதில்லை. அதற்கு சப்டிவிஷன் செய்ய வேண்டும், சர்வே செய்ய வேண்டும். சென்ற வருஷம் வரை சர்வேக்கு வேண்டியவர்கள் குறைவாக இருந்ததால், பட்டா பிரிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டு வந்தன. இப்பொழுது அந்த எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தினால், இனிமேல் அதிகமாகக் கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன். விவசாயிகளுக்குக் கொடுக்கும் பல உதவிகளும், கூட்டுப் பட்டா காரணமாக அவர்களுக்கு அந்த உதவி கிடைக்கவில்லை என்ற நிலை இருந்தது. இனிமேல் அப்படி இருக்காது. அது பற்றியும் ஜமாபந்தி காலத்தில் கவனிக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : ரெவினியூ இலாகா எவ்வளவு பழைய இலாகாவோ அதேமாதிரி ஜமாபந்தி கூட பழைய சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஏற்பாடாக இருப்பதால், சர்க்கார் இதை மாற்றாமல் இருப்பார்களா? ஜமாபந்தி முறையை மாற்றாமல், ஜமாபந்திக்காகக் கொடுக்கும் சில மாமூல்களை மட்டும் நிறுத்த சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : பழைய அமைப்பு என்ற காரணத்திற்காக மாற்றாமல் இருக்கவேண்டும் என்ற நிலைமை இல்லை. மக்களுக்குப் பயன்படாமல் போய்விடும் பட்சத்தில் நிச்சயமாக மாற்றிவிடலாம். ஜமாபந்தி முறையைப் பொறுத்த வரையில், அந்த அமைப்பினால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படவேண்டும். சாதாரண சிறு விவசாயிகள் வெகு தூரம் சென்று அவர்களுடைய குறைகளைச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த முறையினால் நன்மை ஏற்படவேண்டும். ஜமாபந்தி அதிகாரிகள் கணக்குப் பரிசீலனை செய்வதோடு நின்று விடாமல் விவசாயிகளுடைய குறைகளைக் கேட்டுத் தீர்க்க அதிக நேரம் ஒதுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அந்தவிதமாக ஜமாபந்தி முறையை அணுகினால் சாதாரண சிறு விவசாயிகளுக்கு அதிகமான நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. வீ. ராமநாதன் : ஜமாபந்தி நடக்கின்ற காலங்களில் பஞ்சாயத்துத் தலைவர்கள் அழைக்கப்படுகிறார்கள். அதேபோல் சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வதற்கு வகை செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

[18th March 1965

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்களோ அல்லது வேறு சட்ட மன்ற அங்கத்தினரோ ஜமாபந்தி நடக்கும் இடத்திற்குச் சென்று அவர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளையோ கோரிக்கைகளையோ அங்கே சொல்வதற்கு எந்த விதமான தடையும் கிடையாது.

திரு. இரா. நாராயணன்: தலைவர் அவர்களே, ஜமாபந்தி நடக்கும்போது, பஞ்சாயத்துத் தலைவர்களையும் அழைப்பதென்பது இரண்டு வருஷங்களுக்கு முன்பு இருந்த முறை. ஆனால், இப்பொழுதெல்லாம் பஞ்சாயத்துத் தலைவர்களை ஜமாபந்தியின்போது வரவழைப்பதில்லை. அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமையா: அது சம்பந்தமாக என்னிடம் தகவல் எதுவும் இல்லை. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் தெரிந்து சொல்லலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஜமாபந்தி காலங்களில் கிராம உத்தியோகஸ்தர்கள் வருகிறார்கள். தினப் படி சில பேருக்குக் கொடுக்கப்படுகிறது. மற்றும் சில பேருக்குக் கொடுக்கப்படுவதில்லை. யார் யாருக்குப் படி கொடுக்க வேண்டும், யார் யாருக்குப் படி கொடுக்கக் கூடாது என்று விதி முறை ஏதாவது வகுத்திருக்கிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: அதற்கெல்லாம் திட்டவட்டமான விதி முறைகள் இருக்கின்றன.

திரு. கே ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: ஜமாபந்தி காலத்தில், கர்ணம், கிராம முனிசீப்புகள் தாலூகா சென்டரிலேயே ஒரு மாதம் தங்கி இருக்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு அதிகமான செலவு ஏற்படுகிறது. தங்களுக்கு ஆகும் செலவைத் தவிர, ஜமாபந்தி நடத்தச் செல்கிறவர்களுடைய செலவையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதை எப்படியும் வசூல் செய்துவிடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஏற்படுகிற செலவிலே ஒரு பகுதியை அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா: ஜமாபந்தி நடக்கும் இடத்திற்குச் சென்றால் அதற்கு வேண்டிய படி கொடுக்கிறார்கள். மேற்கொண்டு அரசாங்கம் என்ன கொடுக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: பொதுவாக, ஜமாபந்தி காலங்களில் கணக்குத் தணிக்கை செய்யும் குமாஸ்தாக்கள் கிராம அதிகாரிகளைச் சரியானபடி நடத்துவதில்லை என்ற புகாரின் காரணமாகவே, இவ்விதமாக கிராம அதிகாரிகள் சங்கம் தீர்மானம் செய்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அப்படியென்றால், அதிகாரிகளும், அந்தக் கணக்குத் தணிக்கை செய்யும் குமாஸ்தாக்களும் கிராம கர்ணங்களிடமும், முன்சீப்களிடமும் சற்று நல்ல விதமாக நடந்துகொள்ளும்படி அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: ஜமாபந்தி நடக்கும் இடத்திலே எல்லோரும் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பமும். இந்த ஜமாபந்தி முறைக்குப் பதிலாக ஆடிட் முறையை வைத்தால் அவர்கள் நன்றாக நடத்திவிடுவார்கள் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் இடையாது. ஜமாபந்தி என்றால், ஏதோ கணக்கு மட்டும் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டிய அமைப்பு அல்ல; விவசாயிகளுடைய குறைகளையும் கிராம அதிகாரிகளுடைய குறைகளையும் கேட்டுத்தீர்க்கவும் இது பயன்பட வேண்டும்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, ஜமாபந்தி காலங்களில் சொல்லப்படுகிற குறைகள் பல இலாகாக்கள் சம்பந்தப்பட்டவையாகும். ரெவின்யூ அதிகாரிகளுக்கு அந்தக் குறைகள் உண்மையானவை என்று தோன்றினாலும் கூட, அவர்

18th March 1965]

களால் ஒன்றுமே செய்ய முடிவதில்லை. அவர்கள் சிபார்சு செய்து அனுப்பினாலும், அவற்றைப் பல இலாகாக்கள் கவனிக்கக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே ரெவின்யூ அதிகாரிகளுக்குத் தனிப்பட்ட விசேஷ அதிகாரம் கொடுக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஜமாபந்தி அதிகாரிக்கு விசேஷப் பொறுப்புகள் இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அவர்களே சில முடிவுகள் எடுக்க முடியும். ஆனால் தாங்களே எடுக்க முடியாத முடிவுகளை அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சிபார்சு செய்து அனுப்புகிறார்கள். ஒரு கிராமவாசி சம்பந்தப்பட்ட அதிகாரியைப் பார்த்துச் சொல்வதை விட, ஜமாபந்தி அதிகாரியே ஸ்தலத்தில் போய்ப் பார்வையிட்டு அங்கிருக்கும் நிலையை உணர்ந்து மற்ற அதிகாரிகளுக்குச் சொல்வதால் நிச்சயமாக நன்மை அதிகமாக ஏற்படும் என்பதிலே எனக்குச் சந்தேகமே இல்லை.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : ஸார், மலை ஜாதியினர் ஜமாபந்தி கூடும் காலங்களில், "புறம்போக்கு நிலத்தில் பத்து, பதினைந்து இருபது வருஷங்களாக நாங்கள் ஒட்டிப் பயிர் செய்துகொண்டு வருகிறோம், அந்த நிலங்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும்" என்று தாசில்தாரிடம் மனு எழுதிக் கொடுத்துக் கேட்டால், அதற்குக் கர்ணம், கணக்குப்பிள்ளைகள், நம்மைக் கேட்காமல் இங்கே வந்து கேட்கிறானே என்று நினைத்து, "அந்த நிலம் காடு ரிஸர்வைச் சேர்ந்தது, ரோடு புறம்போக்கு, அந்தப் புறம்போக்கு, இந்தப் புறம்போக்கு" என்று சொல்லி, பட்டா கொடுக்காமல் . . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கேட்கவேண்டியதைக் கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்: மலை ஜாதியினர் பத்து, இருபது வருஷங்களாக ஒட்டிக்கொண்டிருக்கும் நிலத்திற்குப் பட்டா கொடுக்கவேண்டும் என்று தாசில்தாரிடம் கேட்டால், உடனடியாகப் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : மலைஜாதியினருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகவே விசேஷ இலாகா இருக்கிறது. அவர்கள் இதில் எல்லாம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஜமாபந்தி முறையினால் அவர்களுடைய பிரச்னை மிக விரைவில் தீரும் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை. காரணம், ஜமாபந்தி அதிகாரியினுடைய பார்வைக்கு இவர்களுடைய குறை வந்தவுடனே அதை அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதுதான் ஜமாபந்தி முறையிலே இருக்கக்கூடிய முக்கியமான அம்சமாகும். ஏதோ ரிபோர்ட் கேட்டு, கிராம அதிகாரிகள் அதற்கு ஒரு முடிவு சொல்லி, அந்த முடிவுக்குத் தகுந்த முறையில் நடக்க வேண்டும் என்றால், ஜமாபந்தி முறையினால் அதிக நன்மை இருக்காமல் போய்விடும். கனம் அங்கத்தினர் விரும்பக்கூடிய ஒரு நல்ல முடிவு ஜமாபந்தி அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும். அதோடல்லாமல், மலை ஜாதியினருக்கு நன்மை செய்வதற்காகவே இருக்கக்கூடிய இந்த ஹரிஜன நல இலாகா இன்னும் விசேஷ கவனம் காட்டும் என்பது என்னுடைய நம்பிக்கை.

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கான குடியிருப்புகள்.

*** 270 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன், திரு. எஸ். மாதவன், திரு. ஆ. கு. சுப்பையா, திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கான குடியிருப்பு ஏற்பாடுகள் தமிழ்நாட்டில் எங்கு எங்கு ஏற்படுத்தப்பட்டன ?

(இ) ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு செலவாயிற்று ?

(உ) அவற்றுள் பயன்படுத்தாமல் விடப்பட்டவை எவை ?